# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 168 | திங்கள் Monday | 14.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# இடைத்தேர்தலில் தனித்து களமிறங்கும் இடதுசாரிகள்

## மதுராந்தகத்தில் சிபிஎம், தாராபுரத்தில் சிபிஐ போட்டி




சென்னை: வரும் இடைத்தேர்தலில் தாராபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மதுராந்தகத்தில்மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தனித்து போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழக ஆட்சி அமைந்த பின்னர் அதிமுகவில் இருந்தசட்டமன்ற உறுப்பினர்கள் 6 பேர் தங்கள் பதவியை ராஜினாமாசெய்துவிட்டு தவெகவில் இணைந்தனர். இந்நிலையில் மதுராந்தகம் மற்றும்தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் இடைத்தேர்தல் அக்.6 நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த நிலையில், கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர்களிடம் தவெக அமைச்சர்கள் நேரில் சந்தித்து ஆதரவு கோரினர்.

இடைத்தேர்தல் புறக்கணிப்பா அல்லது தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பது குறித்து சென்னை பாலன் இல்லத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன் தலைமையில், இன்று (செப்.13) காலை 10 மணிக்கு தொடங்கிய நிர்வாகக் குழு பிற்பகல் 1.30 மணிக்கு முடிவடைந்துள்ளது. இந்த நிர்வாக குழு ஆலோசனையில் இடைத்தேர்தலில் யாருக்கு ஆதரவு என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன், "இடைத்தேர்தல் குறித்து நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் சூழலில் எந்த கூட்டணியிலும் இடம் பெறுவதில்லை என முடிவெடுத்துள்ளோம். அந்த நிலைப்பாடு இப்பொழுது தொடர வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாக குழு முடிவு செய்துள்ளது.

முன்பு, தமிழ்நாட்டில் தமிழக வெற்றிக் கழகத்தை ஜனநாயகத்தின் பொருட்டு மக்கள் அளித்த தீர்ப்புக்கு மதிப்பு கொடுத்து, ஆளுநர் ஆட்சி வரக்கூடாது என்பதற்காக வெளியிலிருந்து ஆதரிப்போம் என தெரிவித்தோம். அமைச்சரவிலும் கூட்டணிலும் நாங்கள் பங்கேற்கவில்லை.

இந்த இடைத்தேர்தல் இயல்பான இடைத்தேர்தல் ஆக இல்லாமல் திணிக்கப்பட்ட இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இடதுசாரிகள் இணைந்து இடைத் தேர்தலை தேர்தலை சந்திப்பதாக முடிவு எடுத்துள்ளோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதே நிலைப்பாடு அறிவிக்கும்.

அதாவது, தாராபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மதுராந்தகத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிடுகின்றன. இடைத்தேர்தல் இடதுசாரிகள் இணைந்து போட்டியிடுகிறது. தமிழ்நாடு இனி இடது பக்கம்...விடுதலைபெற்று முதலாளித்துவம் என்ற அடிப்படையில் செல்கிறது.

மதுராந்தகத்தில் யார் வேட்பாளர் என்பது குறித்து செப்டம்பர் 15ஆம் தேதி வேட்பாளர் அறிமுக கூட்டம் நடத்தப்படும். அதன் பின்னர் வேட்பாளர் அறிவிப்போம். தவெகவிற்கு நாங்கள் அளிக்கிற ஆதரவு தொடர்கிறது. அரசு குற்றங்களை சுட்டிக்காட்டி எங்களுடைய தேர்தல் பிரச்சாரம் இருக்கும்.

தமிழ்நாட்டில் அதிகரித்துள்ள போதை கலாச்சாரம் குறித்தும் மதசார்பின்மை வேலை இல்லா திண்டாட்டம் உள்ளிட்டவை குறித்தும் பிரச்சாரத்தில் எடுத்து கூறுவோம். ஏழை மக்கள் உழைப்பு மக்கள், தொழிலாளர்களின் நலன் சார்ந்தும் இடைத்தேர்தலில் பிரச்சாரம் செய்வோம்.

இடதுசாரி கட்சிக்கு மாணவர்கள் அதிக அளவில் ஆதரவும் அளிப்பார்கள். தமிழக வெற்றிக் கழகத்தின் 100 நாட்கள் ஆட்சியில் நடைபெற்றவை குறித்தும் கூறுவோம். எங்களுக்கு ஜனநாயக சக்திகள் ஆதரவு தருவார்கள்.

நர்சிங் பணியிடங்கள் தனியார் பல்கலைக்கழகம் திருக்கச் சட்ட மசோதா போன்றவற்றை நாங்கள் ஆரம்பத்தில் இருந்து எதிர்த்து வருகிறோம். கல்வியும் மருத்துவம் அரசு அளிக்க வேண்டும் . ஆட்சி அமைந்த உடன் எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்தது தவறு என ஏற்கனவே கூறி வருகிறோம். கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து இடைத்தேர்தலை சந்திப்போம் என தெரிவித்தார்.

மேலும், "தமிழக வெற்றி கழகத்தில் இருந்து அமைச்சர்கள் வந்து இடைத்தேர்தலுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென எங்களிடம் கேட்டனர். அவர்களுக்கு நாங்கள் ஆதரவு இல்லை என்பதை தெரிவிப்போம். மேலும் திமுகவிலிருந்து எங்களிடம் யாரும் ஆதரவு கேட்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளின் தனித்துப் போட்டியிடும் நிலைபாட்டில் இருப்பதால், இணைந்து தேர்தலை சந்திப்போம்" என தெரிவித்தார்.

# லீ மேன்ஸ் கோப்பை கார் பந்தயம்: சில்வர்ஸ்டோன் சுற்றை

## 38வது இடத்தில் நிறைவு செய்த நடிகரும், ரேஸருமான அஜித் குழு



லண்டன்: லீ மேன்ஸ் கோப்பை கார் பந்தய தொடரின் ஐந்தாவது சுற்றான சில்வ ர்ஸ்டோன் சுற்றில் ஒட்டுமொத்தமாக 38-வது இடத்தில் நிறைவு செய்தது அஜித் குமாரின் குழு. முன்னதாக, இந்த பந்தயத்தை முதல்வர் விஜய், கொடியசைத்து தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது. இதில் நடிகரும், ரேஸருமான அஜித் குமார் பங்கேற்றார்.

இங்கிலாந்தில் உள்ள சில்வர்ஸ்டோன் சர்வதேச பந்தய சர்க்யூட்டில் இந்த சுற்று நடைபெற்றது. ஸ்பெயின், பிரான்ஸ் (2 சர்க்யூட்), பெல்ஜியம் ஆகிய நாடுகளில் லீ மேன்ஸ் கோப்பை கார் பந்தய தொடரின் முதல் நான்கு சுற்றுகள் நிறைவடைந்தன. இந்நிலையில், இந்த தொடரின் ஐந்தாம் சுற்று இங்கிலாந்தில் நடைபெற்றது.

இந்த ஐந்தாவது சுற்றில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஓட்டுநர் ரோமைன் வோஸ்னைக் உடன் இணைந்து அஜித் குமார் பங்கேற்றார். எல்.எம்.பி3 புரோ/ஏஎம் கேட்டகிரியில் அவர்கள் இதில் பங்கேற்றனர். அஜித் RedAnt by விராஜ் என் பெயரில் அஜித் குமாரின் குழு இந்த பந்தய தொடரில் பங்கேற்றுள்ளது.

சுமார் இரண்டு மணி நேரம் கொண்ட இந்த சுற்றுக்கான பிரதான பந்தயத்தில் ஒட்டுமொத்தமாக ANS Motorsport அணி முதலிடம் பிடித்தது. அஜித்தின் குழு வெற்றியாளரை காட்டிலும் மூன்று லேப்கள் பின்தங்கிய நிலையில் பந்தயத்தை நிறைவு செய்தது. இதன் மூலம் இந்த சுற்றில் ஒட்டுமொத்தமாக 38-வது இடம் பிடித்தது அஜித் குழு.

அவரது குழு அதிகபட்சமாக மணிக்கு 145.7 கிலோ மீட்டர் வேகத்தில் கார் பந்தயத்தில் சீறி பாய்ந்தது. அதனால் இந்த சுற்றில் அவர்கள் குழுவுக்கு புள்ளிகள் எதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும் லீ மேன்ஸ் கோப்பை கார் பந்தய தொடரில் ஒட்டுமொத்தமாக 21-வது இடத்தில் அவரது குழு உள்ளது. இந்த தொடரின் கடைசி சுற்று வரும் அக்டோபர் மாதம் போர்ச்சுகல் நாட்டில் நடைபெற உள்ளது. இதே தொடரில் அஜித் குழு சார்பில் எல்.எம்.பி3 கேட்டகிரியில் ஆதித்யா படேல் மற்றும் நரேன் கார்த்திகேயன் பங்கேற்றுள்ளனர்.

முதல்வர் விஜய் பிரிட்டன் பயணம்

தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதல்வர் விஜய், பிரிட்டன் நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ளார். சர்வதேச தரத்தில் மோட்டார் ஸ்போர்ட்ஸ் சிட்டி அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. அதையொட்டிய முதல்வர் விஜய், சில்வர்ஸ்டோன் சர்வதேச பந்தய சர்க்யூட்டை பார்வையிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க. ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்ந்துவிட்டது

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



திருச்சி:

"தெருவில் விளையாடிக் கொண்டிருக்கின்ற குழந்தை களுக்கு மிட்டாய் கொடுத்து அள்ளிச் செல்வது போல அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை தவெக இழுத்துக் கொண்டதால் தான் இரண்டு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வந்துள்ளது." என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

திருச்சி அதிமுக நிர்வாகி இல்லத் திருமண விழாவில் அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டார்.

விழாவில்பேசிய எடப்பாடி பழனிசாமி, "புதிதாக ஆட்சிக்கு வந்த தவெக, அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை, தெருவில் விளையாடிக் கொண்டிருக்கின்ற குழந்தைகளுக்கு மிட்டாய் கொடுத்து அள்ளிச் செல்வது போல, இழுத்துக் கொண்டார்கள். அதனால் இரண்டு தொகுதிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் அத் தொகுதி அதிமுக தொண்டர்களின் உழைப்பால் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உழைப்பால் வெற்றி பெற்றார்கள்.

எந்தக் காரணமும் இன்றி சுயலத்துக்காக, குதிரை பேரத்துக்கு விலைபோய் ஆட்சியைத் தக்கவைக்க வேண்டும் என்ற அடிப்படையில், அதிமுகவின் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களையும் ராஜினாமா செய்ய வைத்து ஆட்சியைத் தக்க வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொந்தக் காலில் நிற்கவில்லை, இரவல் காலில் நின்று கொண்டிருக்கிறார்கள். கூட்டணிக் கட்சியில் இருப்பவர்கள் விலகிக் கொண்டால் அவர்களுடைய ஆட்சி கவிழ்ந்துவிடும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்ந்துவிட்டது. முதல்வர் முதலீடுகளை ஈர்க்கவெளிநாடுசென்று முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று பார்த்தால், பத்திரிகைகளில் புகைப்படங்கள் தான் வருகின்றன.

தமிழகமெங்கும் மின்தடை அடிக்கடி ஏற்படுகிறது, மின்கட்டண உயர்வு. 2011-ல் அதிமுக ஆட்சிக்கு வந்தபோது கடுமையான மின்வெட்டு இருந்தது. பொறுப்பேற்ற மூன்றே ஆண்டுகளில் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக அதிமுக மாற்றிக் காட்டியது. மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# திருவள்ளூர் மாவட்டம் ராமாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக்குழு மறுக்கட்டமைப்பு தேர்தல்



திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் ஒன்றியம் ராமாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு மறுக்கட்டமைப்பு தேர்தல் வட்டார வளமையமேற்பார்வையாளர் தா.மீகாவேல் மேற்பார்வையில் நடைபெற்றது இதில் தலைமையாசிரியை மு.கு. ராஜலட்சுமி தலையிலும் ஆசிரியை சுரேகா முன்னிலையிலும் நடந்த தேர்தலில்பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் அனைவரும் கலந்துக் கொண்டு திருமதி A. அஸ்வினி அவர்களை தலைவராகவும் A.நந்தினி அவர்களை துணைத் தலைவராவும் ஒருமனதாக தேர்வு செய்தனர், சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கலந்துக் கொண்டு குழுவின் செயலாக்கத்தை தன்மை குறித்து பேசினார் கல்வியாளர் ஜெகநாதன் மற்றும் முன்னாள் மாணவர் ஜெயந்தன் உள்ளிட்ட உறுப்பினர்கள் திரளாக கலந்துக் கொண்டனர்




## மு.க.ஸ்டாலின் குறித்து பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதலமைச்சர் விஜய்க்கு எதிராக

# தூத்துக்குடியில் முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் திரண்ட திமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய், திமுக தலைவர்கள் மற்றும் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறித்து கொச்சைப்படுத்திப் பேசியதாகக் கூறி, அவரைக் கண்டித்து தூத்துக்குடியில் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் தூத்துக்குடி வி.வி.டி. சிக்னல் அருகே தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன்தலைமையில்நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி. மார்க்கண்டேயன், கருணாநிதி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ஆனந்த சேகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜோசப் விஜய் திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் குறித்து

அவதூறான கருத்துக்களைத் தெரிவித்தும் சட்டமன்றத்தின் மாண்பைக்குலைத்துள்ளதைக் கண்டித்தும் ஜனநாயக விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் தவெக அரசை கண்டித்தும் தவெக மக்கள் விரோத அரசைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் தூத்துக்குடியில் உள்ள சிதம்பரம் நகர் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்றது தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில்ஏராளமானதிமுகவினர்கலந்து கொண்டு தவெக அரசை கண்டித்தும் முதல்வர் விஜயை கண்டித்தும் கோஷங்களை எழுப்பினார்கள்

இதைத் தொடர்ந்து பேசிய முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தமிழக முதல்வர் விஜய் ஆணவத்துடன் ஆட்சி செய்து வருகிறார் அவரின் சுயரூபம் தற்போது வெளிவந்துள்ளது இந்த ஆட்சி ரிலீஸ் ஆட்சியாக மட்டும்தான் செயல்பட்டு வருகிறது சட்டசபையில் நடக்கக்கூடிய சம்பவங்களை ரீல்சாக மட்டுமே வெளியிட்டு வருகிறார்கள் மக்களுக்கான எந்த திட்டங்களையும் அறிவிக்கவில்லை

தமிழகத்தில் அனைத்து திட்டங்களும் கொண்டு வந்தது திமுக தான் தமிழகத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு கொண்டு மு.க. ஸ்டாலின் தான் மேலும் விஜய் அமைத்துள்ள கூட்டணி வெத்து கூட்டணிஎனவும்இந்தவிஜய் அரசின் மிரட்டலுக்கு உருட்டலுக்கு எல்லாம் திமுக ஒரு காலமும் பயப்படாது என்று முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக நிர்வாகிகள் முரளிதரன், அஜிதா ஆக்னல் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.எஸ்.பி. அசோக், மாநகர அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கிறிஸ்டோபர் விஜயராஜ், முன்னாள் அரசு வழக்கறிஞர் மோகன்தாஸ் சாமுவேல், மாநில பேச்சாளர் சரத் பாலா, மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், தூத்துக்குடி ஒன்றிய மத்திய திமுக செயலாளர் கே.கே.ஆர். ஜெயக்கொடி, தெற்கு மாவட்டம் சார்பில் உமரி சங்கர் ராமஜெயம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.என். மதியழகன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாநகராட்சி மண்டலத் தலைவர் நிர்மல் ராஜ், பொதுக்குழு உறுப்பினர் கோட்டு ராஜா, மாநகராட்சி கவுன்சிலர்கள் சுரேஷ்குமார், இசக்கி ராஜா, கீதா முருகேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி தர்மாபுரியில் அருள்மிகு ஒப்பனையம்மாள் சமேத ஸ்ரீ பால்வண்ணநாதர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் கோலாகலம்

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்



தேனி மாவட்டம், தர்மாபுரி கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஒப்பனையம்மாள் சமேத ஸ்ரீ பால்வண்ணநாதர் திருக்கோவிலில், 12 ஆண்டுகளுக்குப் பிறகு மகா கும்பாபிஷேக பெருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதில் 5,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

கடந்த 2012-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றநிலையில், 12 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது ஆகம விதிமுறைகளின்படி திருப்பணிகள் பூர்த்தியடைந்து இம்மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ராஜஸ்தான் மாநிலம் கிஷன்கரில் இருந்து கொண்டு வரப்பட்ட உயர்தரவெண்பளிங்குக் கல்லால்வடிவமைக்கப்பட்ட ஸ்ரீ பால்வண்ணநாதர் லிங்க மூர்த்திக்கு சிறப்புயாகசாலைபூஜைகள் நடத்தப்பட்டன

கடந்த செப்டம்பர் 11-ஆம் தேதி விநாயகர் பூஜை,கணபதி ஹோமத்துடன் தொடங்கிய யாகசாலை பூஜைகள், நான்கு கால வேள்விகளாக நடைபெற்று முடிவடைந்தன.

தொடர்ந்து, புனித நீர் அடங்கிய கலசங்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, விமான கோபுரங்களுக்கும் மூலவர்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நிறைவேற்றப்பட்டது.

விழாவின் முக்கிய நிகழ்வாக அம்பாள் உற்சவர் புறப்பாட்டின் போது எதிர்பாராதவிதமாக மழை பொழிந்து பக்தர்கள் பரவசமடைந்தனர். இக்கோவிலில் உள்ள சுயம்பு நாகம்மாள் புற்றும்,புதிதாகநிறுவப்பட்ட அருள்மிகு மனோன்மணியம்மன், விநாயகர், முருகன், நவகிரகம், காலபைரவர், துர்க்கை அம்மன் சன்னதிகளும் புதுப்பொலிவுடன் திகழ்கின்றன.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 3 நாட்களாகத் தொடர் மகேஸ்வர அன்னதானமும், கோலாட்டம், வில்லுப்பாட்டு, பக்தி இன்னிசை உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளும் வெகுசிறப்பாக நடைபெற்றன. இதில் தேனி மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் இருந்து 5,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு அருள்மிகு பால்வண்ணநாதர் மற்றும் ஒப்பனையம்மாளின் அருளைப் பெற்றுச் சென்றனர். .5,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு 3 நாட்கள் அன்னதானத்துடன் இவ்விழாஇனிதேநிறைவுற்றது.

# கோவை நவக்கரை பகுதியில் உள்ள ஈ.ஏ.எஸ்.ஏ., பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற 14வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது

## கல்லூரியின் தலைவர் டி.ஈ. சுஜாதா மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பெருமைப்படுத்தினார்




கோவை பாலக்காடு சாலை நவக்கரையில் அமைந்துள்ள ஈ.ஏ.எஸ்.ஏ., பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், 14-வது ஆண்டு பட்டமளிப்பு விழா, கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

ஈ.ஏ.எஸ்.ஏ., பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவர் டி.ஈ. சுஜாதா விழாவைத் தொடங்கி வைத்து,தலைமைஉரையாற்றினார். அதைத்தொடர்ந்து பி.இ., பி.டெக். ஆகிய இளநிலை பட்டப்படிப்பு, எம்.இ., எம்.பி.ஏ. பட்ட மேற்படிப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். கல்லூரியின்

செயலாளர் டி.ஈ. அஜித், தாளாளர் டி.ஈ. ஆதர்ஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் முனைவர் இசட். ராபர்ட் கென்னடி வரவேற்றுப் பேசி, ஆண்டறிக்கை வாசித்தார். பெங்களூரு ஐ.பி.எம். நிறுவன முதுநிலை பொறியியல் கல்லூரியை சேர்ந்த ஜோதி சேகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து சென்னை அண்ணா பல்கலைக்கழக அளவில் 8-வது ரேங்க் பெற்ற எம்.இ., கட்டமைப்பு பொறியியல் துறை மாணவி இ.சஹானாவுக்கு ரூ.25 ஆயிரம் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

இதேபோல் பி.இ., பி.டெக்., பட்டப்படிப்புகளில் கல்லூரி அளவில் துறை வாரியாக முதல் ரேங்க் பெற்ற பி.டெக். வேளாண் பொறியியல் துறை மாணவி சுபத்ரா தேவி, பி.டெக்.,செயற்கைநுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல்துறைமாணவி தனலட்சுமி, பி.இ., கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை மாணவர் சபரிநாதன், பி.இ., மின்னணுவியல் மற்றும்தகவல் பொறியியல் மாணவி ரம்சீனா, பி.இ., இயந்திரப் பொறியியல் துறை மாணவர் ராகுல், பி.டெக்., தகவல் தொழில்நுட்பத்துறை மாணவி விஜயபாரதி, பி.டெக்., பெட்ரோலியப் பொறியியல் துறை மாணவர் அமுதேஸ்வரன் ஆகியோருக்கு பரிசுகளும், கேடயமும், சான்றிதழ்களும் மற்றும் பட்டங்களும் வழங்கப்பட்டது..

முதுநிலை பட்ட மேற்படிப்புகளில் முதல் ரேங்க் பெற்ற எம்.பி.ஏ., மாணவி அனகா, எம்.இ., கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை மாணவர் சரத், எம்.இ., கட்டுமானப் பொறியியல் மற்றும் மேலாண்மைத்துறை மாணவி அமலா ஷரப், எம்.இ., கட்டமைப்பு பொறியியல் துறை மாணவி தீர்த்தா சாபு ஆகியோருக்கும் பரிசுகளும் கேடயமும், சான்றிதழ்களும் மற்றும் பட்டங்களும் வழங்கப்பட்டது. விழாவில் மாணவ, மாணவிகள், பெற்றோர், பேராசிரியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்கது.

# தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை சார்பில் 500 பனை விதைகள் சேகரிப்பு



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே கல்லங்காட்டு வலசு பகுதியில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை சார்பில் முதற்கட்ட பனை விதை சேகரிப்பு முகாம் நடைபெற்றது.

அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து 500-க்கும் மேற்பட்ட பனை விதைகளை சேகரித்தனர்.

அப்போது தலைவர் சீனிவாசன் பேசுகையில், "பனை மரம் தமிழரின் பாரம்பரிய அடையாளம். அழிந்து வரும் பனை மரங்களை மீட்டெடுக்கவும், நீர் வளத்தை பாதுகாக்கவும் பனை விதை நடவு அவசியம். சேகரிக்கப்பட்ட விதைகள் விரைவில் பல்வேறு பகுதிகளில் நடவு செய்யப்படும்" என்றார்.

இதற்கான ஏற்பாடுகளை அறக்கட்டளையின் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

நிகழ்வில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் செயலாளர் பிரபு, பொருளாளர் சின்னையன் மற்றும் தன்னார்வலர்கள் ஞானசேகரன், ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# எஸ்.பி. ஸ்டாலின் மாற்றத்தால் உற்சாகமடைந்த கனிம வள மாஃபியா கும்பல்.

## இரவு நேரங்களில் குமரி வழியாக கேரளத்திற்கு சீறிப்பாய்ந்த கனிம வள லாரிகள்.

எஸ் பி ஸ்டாலின் மாற்றப்பட்டதை தொடர்ந்து கடந்த இரு நாட்களாக குமரி வழியாக கேரளாவுக்கு ரகசியமாக கனிம வளங்கள் கடத்தப்பட்டு வருவதாக கூறப்படு கிறது,நேற்று இரவு சோதனைச் சாவடி வழியாக டாரஸ் லாரிகள் சென்றன,சில சோதனை சாவடிகளில் போலீசார் அந்த டாரஸ் லாரிகளை மடக்கி பிடித்துள்ளனர் எஸ் பி ஸ்டாலின் இடமாற்றம் கனிமவள மாஃபியா கும்பலுக்கு உற்சாகத்தைதந்துள்ளதாகவும்கூறுகின்றனர்,பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.



கோயமுத்தூர் மாவட்ட கார் டிரேடர்ஸ் வெல்ஃபேர் அசோசியேஷன் சார்பாக

# 11 வது எடிஷன் மெகா யூஸ்டு கார் விற்பனை மேளா செப்டம்பர் 17ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடைபெற உள்ளது




கோயமுத்தூர்மாவட்ட கார் டிரேடர்ஸ் வெல்ஃபேர் அசோசியேஷன் சார்பாக 11 வது எடிஷன் மெகா யூஸ்டு கார் விற்பனை மேளா செப்டம்பர் 17ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடைபெற உள்ளது இதில்

300-க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளதாக ஒருங்கிணைப்பாளர்கள் தகவல்கோயமுத்தூர் மாவட்ட கார் டிரேடர்ஸ் வெல்ஃபேர் அசோசியேஷன் சார்பில், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கார் விற்பனையாளர்களின் பயன்படுத்தப்பட்ட கார்கள் இடம்பெறும் பிரம்மாண்டமான பயன்படுத்தப்பட்ட கார் விற்பனை கண்காட்சி கோவையில் செப்டம்பர் 17-ம் தேதி முதல் 22-ம் தேதி வரை ஆறு நாட்கள் நடைபெற உள்ளது. கோவை திருச்சி சாலையில் உள்ள வெங்கடலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில், 300-க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளன. சிறிய ரக கார்கள் முதல் உயர்தர கார்கள் வரை பல்வேறு வகையான கார்கள் இடம்பெறுவதுடன், ரூ.50 ஆயிரம் முதல் பயன்படுத்தப்பட்ட கார்கள் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோவை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது விருப்பம் மற்றும் பட்ஜெட்டிற்கு ஏற்ற கார்களை ஒரே இடத்தில் நேரடியாக பார்வையிட்டு, பல்வேறு கார்களை ஒப்பிட்டு தேர்வு செய்யும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது மேலும், கார் வாங்க விரும்புவோர் மட்டுமின்றி, தங்களிடம் உள்ள பழைய காரை விற்பனை செய்ய விரும்புபவர்களும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டு பயனடையலாம். பழைய காரை மாற்றிக் கொள்ளும் வசதி, தங்களது காரை கண்காட்சிக்கு கொண்டு வந்து நிறுத்தி விற்பனை செய்யும் பார்க் அண்ட் செல் வசதி உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கார் வாங்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, வாகனங்களின் நம்பகத்தன்மை மற்றும் ஆவணங்கள் தொடர்பான பரிசோதனை, வங்கி கடன் வசதிக்கான உதவி, ஆவணப் பணிகளுக்கான உதவி உள்ளிட்ட சேவைகளும்,

குறிப்பாக தமிழகம் முழுவதும் இலவசமாக உரிமையாளர் பெயர் மாற்றம் செய்து வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட காரை வாங்க அல்லது தங்களது பழைய காரை விற்பனை செய்ய விரும்பும் பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் என ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.




கோவை மாவட்டம் பொள்ளாச்சி சாலை, சுந்தராபுரம் பகுதியில்,

# கியூப் சினிமா மற்றும் கற்பகம் கிராண்ட் பிளக்ஸ் இணைந்து எபிக் மற்றும் எபிக் லக்ஸ்ஆன் எனும் மிகப்பெரிய எல்இடி திரையரங்கை உருவாக்கியுள்ளது

## இந்த திரையரங்குகள் விரைவில் திறக்கப்பட உள்ளது

கியூப் சினிமா மற்றும் கற்பகம் கிராண்ட் பிளக்ஸ் இணைந்து, எபிக் மற்றும் எபிக் லக்ஸ்ஆன் திரைய ரங்கை, கோவை சுந்தராபுரம் பகுதியில் அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு பிரீமியம் சினிமா அனுபவங்களைக் கொண்டு வந்துள்ள இத்திரையரங்கில் 5 திரையரங்குகள் அமைந்துள்ளது. இங்கு ஒரே நேரத்தில், 5 திரையரங்குகளிலும் சேர்ந்து, 1050 பேர் திரைப்படங்களை கண்டு ரசிக்க முடியும். தமிழகத்தில்,முதல் முறையாக எபிக் லக்ஸ்ஆன் மற்றும் 14வது எபிக் திரையின் தொடக்கத்தைக் இங்கு உள்ளடக்கியுள்ளது இந்த எபிக் லக்ஸ்ஆன் அமைப்பு, இந்தியாவின் மிகப்பெரிய எல்இடி சினிமா திரையாக அமைந்துள்ளது. பிரீமியம் சினிமாவை வழங்கும் வகையில், இரண்டு தனித்துவமான அணுகுமுறைகளை ஒன்றிணைத்து, இந்த புதிய திரையரங்குகளில் மேம்பட்ட படம் மற்றும் ஒலி தொழில்நுட்பங்கள், ஆழ்ந்த ஒலி அமைப்பு மற்றும் கவனமாக வடிவமைக்கப்பட்ட சினிமா சூழல் ஆகியவற்றின் மூலம் பார்வையாளர்களுக்கு ஒரு மேம்பட்ட திரைப்பட அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள திரையரங்கில்,படம் மற்றும் ஒலி முதல் பார்க்கும் சூழல் வரை, திரைப்பட அனுபவத்தை மேம்படுத்த ஒன்றிணைந்து செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த திரையரங்கம் குறித்து க்யூப் சினிமாவின் தலைமைச் செயல் அதிகாரி ஹர்ஷ் ரோஹத்கி செய்தியாளர்களிடம்கூறியதாவது திரையரங்க திரையே ஒரு தனி அனுபவமாக மாற்றுவது என்ற எளிய நோக்கத்துடன் எபிக் உருவாக்கப்பட்டுள்ளது, எபிக் மற்றும் எபிக் லக்ஸ்ஆன் மூலம், கோவையில் உள்ள திரைப்பட பார்வையாளர்கள்,

சிறப்பான படம் மற்றும் ஒலியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பிரீமியம் சினிமாவின் இரண்டு தனித்துவமான அணுகுமுறைகளை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். குறிப்பாக, எபிக் லக்ஸ்ஆன்-ஐ தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலம், இப்பகுதிக்கு முதன்முறையாக ஒலி ஊடுருவாத எல்இடி சினிமா அனுபவத்தை வழங்குகிறோம். கற்பகம் கிராண்ட்பிளெக்ஸ உடனான எங்கள் கூட்டாண்மை, திரைப்படத்தின் மாயாஜாலத்தின் மீது கவனத்தை உறுதியாக வைத்திருக்கும் அதே வேளையில், பார்வையாளர்களுக்கு சினிமா தொழில்நுட்பத்தில் சமீபத்திய முன்னேற்றங்களை அணுகுவதற்கான எங்கள் பகிரப்பட்ட அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது என்றார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது கற்பகம் குழும திரையரங்குகளின் நிர்வாக இயக்குநர் என். சிவபிரகாசம் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எய்யலூர் நெல் கொள்முதல் நிலையத்தில் தாமதம் – விவசாயிகள் கடும் அவதி



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே எய்யலூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், விவசாயிகளின் நெல் மூட்டைகளை கொள்முதல்செய்து ஏற்றும் பணிகள் மந்தமாக நடைபெறுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முன்பதிவு செய்து பல நாட்களாக காத்திருக்கும் விவசாயிகளின் நெல்மூட்டைகள் முறையாக கொள்முதல் செய்யப்படாமல் இருப்பதாகவும், பலமுறை காய வைத்த நெல்லை கூட காலதாமதமாகஎடுத்துச் செல்வதாகவும் விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மேலும், வெளியூர் நெல் மூட்டைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், விவசாயிகளிடம் ஒரு மூட்டைக்கு 60 முதல் 66 வரை பணம் வசூலிப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பல நாட்களாக காய வைத்துநெல்மூட்டைகள் திறந்தவெளியில் கிடப்பதால், திடீரென மழை பெய்தால் நெல் நனைந்து பெரும் இழப்பு ஏற்படும் என விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு குறுவை சாகுபடி காலத்தில் இதுபோன்ற பிரச்சனை அதிகளவில் ஏற்படவில்லை எனகூறும்விவசாயிகள், தற்போது கொள்முதல் பணிகளை முறையாக செயல்படுத்த அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படாததே தாமதத்திற்கு காரணமாக இருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

எனவே, முன்பதிவு செய்த விவசாயிகளின் நெல்லை வரிசைப்படி விரைந்து கொள்முதல் செய்யவும், பணம் வசூலிப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தவும், மழையால் நெல் சேதமடையாமல் உரிய பாதுகாப்புநடவடிக்கைஎடுக்கவும் தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.



# ஈரோடு சூரம்பட்டி வலசில் ஸ்ரீசுயம்பு மாரியம்மன் கோவிலில் உழவாரப்பணி

ஈரோடு மாநகர் சூரம்பட்டி வலசில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சுயம்பு மாரியம்மன் திருக்கோவிலில், தேசிய இந்து திருக்கோவில்கள் பவுண்டேசன் (NHTF) சார்பில் உழவாரப்பணி நடைபெற்றது.

NHTF தேசிய செயலாளர் G. சுரேஷ் ஆலோசனையின்படி, ஈரோடு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. தங்கவேல் மற்றும்மாவட்டஅமைப்பாளர் கு. கோபிநாத் ஆகியோர் ஒருங்கிணைப்பில், 20-க்கும் மேற்பட்ட அடியார்கள் முழுமையான ஒத்துழைப்புடன் உழவாரப்பணியை சிறப்பாக மேற்கொண்டு நிறைவு செய்தனர்.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில் செயல் அலுவலர் சோ. சந்தோஷ், உதவியாளர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஓய்வூதியம் தாமதமாக வாய்ப்பு தமிழக அரசு விளக்கம்



சென்னை: சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு நடப்பு மாதத்துக்கான தொகைவரவு வைக்கப்படுவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம், தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 19 லட்சத்து 20,858 பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஆகஸ்ட் மாதத்துக்கான ஓய்வூதியத் தொகையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த திட்டங்களின் பயனாளிகளுக்கான ஓய்வூதியப் பட்டியல் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசின் பங்களிப்புத் தொகைக்கான ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், செப் .11 முதல் 14-ம் தேதி வரை மத்திய அரசு அலுவலகங்களுக்கு தொடர்விடுமுறைஎன்பதால்,ஓய்வூதியப்பட்டியலுக்கு ஒப்புதல் பெறுவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, தங்கள் ஓய்வூதியத் தொகை வரவு வைக்கப்படுவதில் ஏற்படும் தாமதம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோடு மாவட்டத்தில் H1N1 பருவகால காய்ச்சல் விழிப்புணர்வு

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பருவமழை காலத்தை முன்னிட்டு H1N1 எனப்படும் பன்றிக் காய்ச்சல் / பருவகால இன்ஃப்ளூயன்சா பரவல் காணப்படும் நிலையில், பொதுமக்கள் பீதி அடைய வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத் துறை கேட்டுக்கொண்டுள்ளது.



அறிகுறிகள்: காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, மூக்கில் நீர் வடிதல், மூச்சுத் திணறல், நெஞ்சு வலி மற்றும் இரத்தத்துடன் கூடிய சளி.

காய்ச்சல், இருமல், தொண்டைவலி ஏற்பட்டால்உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகி சிகிச்சை பெற வேண்டும். சுயமாக மருந்து உட்கொள்ள வேண்டாம்.

கைகளை அடிக்கடி சோப்பால் கழுவுதல், இருமல் மற்றும் தும்மலின்போது முகத்தை கைக்குட்டை அல்லது துணியால் மூடுதல்,போதுமான தண்ணீர் மற்றும் திரவ உணவுகளை உட்கொள்ளுதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளைபொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஈரோடு அரசு தலைமைமருத்துவமனை உள்ளிட்ட அனைத்து அரசு மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் Oseltamivir (Tamiflu) மருந்து போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.கர்ப்பிணிப் பெண்கள்,5வயதுக்குட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் சர்க்கரை நோய், இதய நோய், நாள்பட்ட சுவாச நோய் உள்ளவர்கள் சிறப்பு கவனத்துடன் கண்காணிக்கப்படுகின்றனர்.

காய்ச்சல் 2 நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாக மருத்துவரை அணுகவும். வதந்திகளை நம்பவேண்டாம்என மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார். மருத்துவ உதவி எண்: 104மாவட்ட சுகாதார அலுவலகம், ஈரோடு / அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகலாம்.

### இந்தியாவிலேயே முதன் முறையாக மூட்டு மாற்று அறுவை சிகிச்சையில்

# நவீன ரோபோ தொழில்நுட்பம் கோவை ராயல் கேர் மருத்துவமனையில் அறிமுக விழா நிகழ்ச்சி

### துவக்க விழாவில் தமிழக மக்கள் வாழ்வு மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் அருண் ராஜ் பங்கேற்பு



கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்கான நான்காம் தலைமுறை 'ஸ்ட்ரைக்கர் மாகோ 4 ஸ்மார்ட் ரோபோடிக்ஸ்' தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க நிறுவனத்தின் நவீன ரோபோ தொழில்நுட்பம்,இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள நிலையில் இதற்கான அறிமுக விழா கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் ய ஒட்டல் அரங்கில் நடைபெற்றது..

ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், தமிழகமக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதார துறை அமைச்சர் அருண்ராஜ் கலந்து கொண்டு மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்கான நான்காம் தலைமுறை தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்து வைத்தார்..

புதிய ஸ்ட்ரைக்கர் மாகோ ரோபோட்டிக் தொழில் நுட்பம் வாயிலாக பகுதி முழங்கால், முழு முழங்கால்,இடுப்பு, தோள்பட்டை உள்ளிட்ட பல்வேறு மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளை நோயாளிகளின் உடலமைப்புக்கு ஏற்ப தனிப்பட்ட முறையில் திட்டமிட்டு, அதிக துல்லியத்துடன் மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அருண் ராஜ், மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் தமிழகம் இந்திய அளவில் முன்னணி மாநிலமாக இருந்து வருவது பெருமைக்குரியது என தெரிவித்தார்.

தனியார் மருத்துவமனைகளில் அறிமுகப்படுத்தப்படும் இதுபோன்ற நவீன மருத்துவ தொழில்நுட்பங்களின் பயன்கள் பொதுமக்களுக்கும் கிடைக்கும் வகையில்,அரசு மருத்துவமனைகளிலும் இதுபோன்ற நவீன தொழில்நுட்பங்களை விரைவில் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாதேஸ்வரன் பேசுகையில், நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்கும் நோக்கில் ராயல் கேர் மருத்துவமனை நவீன தொழில்நுட்பங்களை தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜ்குமார் நடேசன் கூறுகையில், நோயாளியின் உடலமைப்புக்கு ஏற்ப அறுவை சிகிச்சையை திட்டமிடவும், சிக்கலான மறுமூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளையும் அதிகதுல்லியத்துடன் மேற்கொள்ளவும் இந்த ரோபோ தொழில்நுட்பம் உதவும் என தெரிவித்தார்.



# ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சமரச மையத்தில் நடைபெற்றது

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் தேசிய மக்கள் நீதிமன்றம், ஈரோடு சம்பத் நகரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் 12.09.2026 அன்று ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி S.சமீனா தலைமையில் நடைபெற்றது. இதன் தொடக்க விழா நிகழ்வானது மாவட்ட நீதிமன்றவளாகத்தில் அமைந்துள்ள சமரச மையத்தில் நடைபெற்றது.ஈரோடுமாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர்/மூத்த சிவில் நீதிபதி R.ஸ்ரீவித்யா இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தார். இந்த தொடக்கவிழா நிகழ்வில் சிறப்பு மாவட்ட நீதிபதி.C.M. சரவணன் மற்றும் மாவட்ட நீதிபதிகள், சார்பு நீதிபதிகள், உரிமையியல் நீதிபதிகள், நீதித்துறை நடுவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும் வட்ட சட்டப்பணிகள் குழு கோபிசெட்டிபாளையத்தில் S. ராமசந்திரன், மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, மற்றும் A. பாலகிருஷ்ணன் தலைமையிலும், வட்ட சட்டப்பணிகள் குழு பவானியில் A.M.ரவி , நான்காம் கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் M.முருகன் , தலைவர்/சார்பு நீதிபதி தலைமையிலும், வட்ட சட்டப்பணிகள் குழு சத்தியமங்கலத்தில் K. S. சபீனா தலைவர்/சார்பு நீதிபதி தலைமையிலும், வட்ட சட்டப்பணிகள் குழு பெருந்துறையில் M. அஸ்வக் அகமத் , தலைவர்/சார்பு நீதிபதி, அவர்கள் தலைமையிலும், வட்ட சட்டப்பணிகள் குழு கொடுமுடியில் P. ஸ்ரீதேவி சார்பு நீதிபதி மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழு எழுமாத்தூரில் K. விஜயகுமார் தலைவர்/மாவட்ட உரிமையியல் மற்றும்குற்றவியல் நடுவர் நீதிபதி, அவர்கள் தலைமையிலும் மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழு அந்தியூரில் உரிமையியல் நீதிபதி, அவர்கள் தலைமையிலும் தேதிய மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. மேலும் தாலுக்காவில் உள்ள உரிமையியல் நீதிபதிகள், நீதித்துறை நடுவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர். மதிவதனி வணங்காமுடி தலைவர்/மாவட்ட

அன்று நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் ஈரோடு மாவட்டம் உட்பட 7 தாலுக்காக்களில் சட்டப்பணிகள் ஆணைக்குழுக்களால் மொத்தம் 18 அமர்வுகளில் 1943 வழக்குகள் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. அதில் 1831 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த மதிப்பு ரூ.28,91,14,051/- ஆகும். மேலும் விபத்து காப்பீட்டு வழக்குகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 3 காசோலைகள் ரூ.1,04,00,000-க்கு முதன்மை மாவட்ட நீதிபதி சமீனா வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொடைக்கானல் அருகே சட்டவிரோத கல்குவாரி: அரசு அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன்? நயினார் நாகேந்திரன் கேள்வி



கொடைக்கானல் அருகே சட்டவிரோதமாக இயங்கி வரும் கல்குவாரியினை அரசு அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன் என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக, நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ்தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

சுமார் 200-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் கொடைக்கானல் அருகேயுள்ள நாயுடுபுரம் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வரும் கல்குவாரியில், அதிபயங்கர வெடிபொருட்கள் மற்றும் கனரகவாகனங்களைப் பயன்படுத்தி பாறைகள் தகர்க்கப்படுவதை நேரடியாக களத்திற்கே சென்று படம் பிடித்துக் காட்டியுள்ளார் தமிழகபாஜகவின் திண்டுக்கல் மேற்கு மாவட்டத் துணைத் தலைவர் மதன். மலைப்பிரதேசங்களை இப்படி சட்டவிரோதமாக துண்டு துண்டாகவெட்டி எடுப்பது கடுமையான நிலச்சரிவிற்கு வழிவகுக்கும் என்பதை முதல்-அமைச்சர் விஜய் உடனடியாககருத்தில்எடுத்துக் கொள்ள வேண்டும்.


தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959-ன் படி, தேசிய பூங்கா, வனவிலங்கு சரணாலயங்கள், புலிகள் காப்பகம், யானை வழித்தடங்கள் மற்றும் காப்புக் காடுகள் உள்ளிட்டவைகளுக்கு அருகில் இதுபோன்ற கல்குவாரிகள் அமைய கடும் கெடுபிடிகள் நிலவும் நிலையில், நாயுடுபுரத்தில் எதன் அடிப்படையில் இந்த கல்குவாரி இயங்கி வருகிறது? மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்(SEIAA-TN) உள்ளிட்ட அரசு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுக்களிடம் இருந்து குறிப்பிட்ட கல்குவாரி முறையாக அனுமதி வாங்கியதா?.

அரசு அதிகாரிகள்

புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான நாயுடுபுரத்தில் சட்டவிரோதமாக இயங்கி வரும் இந்த கல்குவாரி குறித்து திண்டுக்கல் மாவட்டத்தின் அரசு அதிகாரிகள் எதுவும் கண்டுகொள்ளாதது ஏன்? அதிலும் தமிழக பாஜகவின் மேற்கு மாவட்டத் தலைவர் மதன் இதுகுறித்து பலமுறை புகாரளித்தும் கூட, இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன்? குறிப்பிட்ட கல்குவாரிக்குப் பின்னணியில் ஏதேனும் மிகப்பெரிய அரசியல் புள்ளியின் தலையீடு இருக்கிறதா? உள்ளிட்ட மக்களின் கேள்விகளுக்கு ஆளும் அரசு தகுந்த ஆதாரங்களுடன் உடனடியாக பதிலளிக்க வேண்டுமென தமிழக பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன்.

# Abhijeet Dipke's 'resignation letter' as 'CM of MP' sparks row, several netizens demand FIR againt CJP founder

*Abhijeet Dipke's satirical letter led to a social media controversy. While some users backed his criticism, several others hit back at the CJP founder.*



A row broke out on Sunday over Cockroach Janta Party (CJP) founder Abhijeet Dipke's satirical resignation letter, in which he pretended to step down as Madhya Pradesh chief minister while taking a swipe at the state government. While some social media users joined in criticising the MP government, several others, including BJP workers, accused Dipke of "misuse of letterhead".

Dipke took the dig at the MP government after he was allegedly heckled by some influencers in Balaghat. He had travelled there to meet the parents of tribal children who had died following an infection.

Inside Dipke's satirical resignation letter "I hereby resign as the Chief Minister of MP with immediate effect. I thank Hon'ble PM @narendramodi ji for giving me the opportunity to serve the people of MP, an opportunity in which I have clearly failed," Dipke wrote on X, sharing the fake letter, which closely resembled an authentic one.

In the satirical letter, Dipke listed what he described as the "failures" of the state government. He targeted chief minister Mohan Yadav and his colleagues over the Sagar hooch tragedy and the deaths linked to an infection in Balaghat, among other issues.

Netizens react to Dipke's 'resignation letter'

Dipke's satirical letter led to a social media controversy. Some users backed his criticism and targeted the BJP-led state government.

"1 reply and whole BJP Lobby is clean bowled," a user wrote.

However, several users accused Dipke of "misuse of official letterhead" and called for a case to be filed against him.

Vignesh Shishir, a BJP worker, also called for a case against Dipke over the alleged "misuse of letterhead".

"If no action is taken in this regard, I will approach the concerned Hon'ble Courts for enforcement of law against this Abhijeet Dipke for Such Criminal Activities," Shishir wrote.

# சென்னை உதவி கமிஷனர்கள் உள்பட 46 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் அதிரடி மாற்றம்



தமிழ்நாடு முழுவதும் 46 துணை போலீஸ் சூப்பிரண்டுகளை பணியிட மாற்றம் செய்து. டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் உத்தரவிட்டுள்ளார். அவர் பிறப்பித்த மாறுதல் பட்டியலில், சென்னை உதவி கமிஷனர்கள் சிலரும் இடம்பெற்றுள்ளனர். தாம்பரம் மற்றும் ஆவடி கமிஷனரகத்திலும் உதவி கமிஷனர்கள் மாற்றப்பட்டுள்ளனர். சென்னை வண்ணாரப்பேட்டை உதவி கமிஷனர் மகேந்திரன் , கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு மாற்றப்பட்டார். ஆவடி கமிஷனரகத்தில் குற்ற ஆவண காப்பகத்தில் உதவி கமிஷனராக பணியாற்றி வரும் முத்துராஜா, லஞ்சஒழிப்பு துணை போலீஸ் சூப்பிரண்டாக பொறுப்பேற்பார்.

ஆவடி கமிஷனரகத்தில் உளவுப்பிரிவு உதவி கமிஷனராக பணியாற்றி வந்த மணிவண்ணன், காஞ்சீபுரம் டி.எஸ்.பி. யாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆவடி போலீஸ் கமிஷனரகத்தில், பொன்னேரி உதவி கமிஷனராக தமிழ்வாணன் பொறுப்பேற்பார்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்த முகமது நாசர். சீருடை பணியாளர் தேர்வாணையத்தில் டி.எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் டி.ஜி.பி. அலுவலகத்தில் தேர்தல் பிரிவு டி.எஸ்.பி. பொறுப்பை கவனிப்பார்.

சென்னை ஐகோர்ட்டு உதவி கமிஷனராக பாலாஜி பதவியேற்பார். சென்னை தாம்பரம் கமிஷனரகத்தில் மக்கள் தொடர்பு உதவி கமிஷனராக மகேஷ் பொறுப்பேற்பார்.ஆவடி போலீஸ் கமிஷனரகத்தில் நலப்பிரிவு உதவி கமிஷனராக சஞ்சீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆவடி உதவி போலீஸ் கமிஷனராக சம்பத் பதவியேற்பார். சென்னை அயனாவரம் உதவி கமிஷனராக பணியாற்றும் வேலு, கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு மாற்றப்பட்டார். சி.பி.சி.ஐ.டி. 'சைபர் கிரைம்' பிரிவில் டி.எஸ்.பி.யாக ராஜலட்சுமி நியமிக்கப்பட்டுள்ளார்.தாம்பரம் கமிஷனரகத்தில் நலப்பிரிவு உதவி கமிஷனராக ஹரிசங்கரி பொறுப்பேற்பார்.

# ஈரான் சரக்கு கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் ஒருவர் பலி



ஈரான் சரக்கு கப்பல் மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் மாலுமி உயிரிழந்தார்.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹர்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால், கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது.

இதையடுத்து, இரு தரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டது. இதன் காரணமாக சில நாட்கள் மத்திய கிழக்கில் சற்று அமைதியான சூழ்நிலை நிலவி வந்தது.

ஆனால்,ஈரான் ,அமெரிக்கா இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. அதன்படி, கடந்த மாதம் இறுதியில் இருந்து இரு நாடுகளும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக ஹர்மூஸ் ஜலசந்தி பகுதியில் செல்லும் கப்பல்கள் மீது ஈரானும், அமெரிக்காவும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

ஈரான் சரக்கு கப்பல் மீது தாக்குதல்

இந்நிலையில், ஹர்மூஸ் ஜலசந்தி பகுதி வழியாக சென்ற ஈரான் சரக்கு கப்பல் மீது இன்று ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை தாக்குதலை அமெரிக்கா நடத்தியதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்த ஏவுகணை தாக்குதலில் ஈரான் மாலுமி உயிரிழந்தார். மேலும், 4 மாலுமிகள் படுகாயமடைந்தனர்.

ஈரானின் குவாசம் தீவு அருகே ஹர்மூஸ் ஜலசந்தியில் இந்ததாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முன்னதாக, ஜோர்டான் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீது ஈரான் இன்று அதிகாலை ஏவுகணை தாக்குதல் நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.